1975 மார்ச் 18] [பேரவைத் தலைவர்]

தாள்களை 1—4—1975-ம் நாள் செவ்வாய்க்கிழமை, முற்பகல் 11 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத்தாள்கள், 1—4—1975 ஆம் நாள், செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 2—4—1975 ஆம் நாள் புதன்கிழமை காலை 11 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை, நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு அதாவது 13-க்கும் மேற்படின் 5—4—1975 ஆம் நாள் சனிக்கிழமையன்று காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே சட்டமன்றப் பேரவை குழுக்கள் கூடும் அறையில் (உறுப்பினர்கள் முன்னுள் ஓய்வு அறையில்) வாக்கெடுப்பு நடைபெறும்.

(6) அரசினர் சட்ட முன் வடிவு.

தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு, குத்தகைதாரர்கள் பாதுகாப்பு—நியாயவாரம் கொடுத்தல்(திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1975 ஆம் ஆண்டு, குத்தகைதாரர்கள் பாதுகாப்பு—நியாயவாரம் கொடுத்தல் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி அளிக்கப்பட்டது.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(7) 1975–76-ம் ஆண்டுச்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) நிதிக் கோரிக்கை எண் 1—நிலவரித் துறை.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"நிதிக் கோரிக்கை எண் 1 —நிலவரித் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,94,63,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".